செ.வெ.எண்.09/ஜூன் தேதி : 03.06.2016

**பத்திரிக்கைச் செய்தி**

**தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், அதியமான்கோட்டையில் நடைபெற்ற அம்மா திட்ட சிறப்பு முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் பயனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.**





தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், அதியமான்கோட்டை ஊராட்சியில் இன்று (03.06.2016) நடைபெற்ற அம்மா திட்ட சிறப்பு முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் 2 நபர்களுக்கு முதல் பட்டதாரி சான்றிதழ்களும், 2 நபர்களுக்கு சாதி சான்றிதழ்களையும், 52 குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், நீக்கம் மற்றும் முகவரி மாற்றம் செய்து வழங்கி பின்னர் தெரிவித்ததாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் அம்மா திட்ட சிறப்பு முகாம் நடைபெற்று வருகிறது. நல்லம்பள்ளி வட்டம் புதியதாக அமைந்த பிறகு நடைபெறும் முதல் அம்மா திட்ட சிறப்பு முகாம் இதுவாகும். பொதுமக்களின் குறைகளை களையும் வகையில் தமிழ்நாடு அரசு மின் ஆளுமை திட்ட பொது சேவை மையத்தின் மூலம் அடித்தட்டு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் சாதி சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், வருமானச் சான்றிதழ், முதல் பட்டதாரி சான்றிதழ், சிட்டா நகல்கள், வில்லங்கச்சான்றுகள், நில மதிப்பீடு சான்றிதழ், மகளிர் திருமண திட்டம், ஏழை விதவை மகள் திருமண திட்டம், ஆதரவற்ற பெண்கள் நிதியுதவி திட்டம், பெண்குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் என அனைத்து சேவைகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கூடுதல் சிறப்பு என்னவென்றால் தற்போது கணினி வாயிலாக பட்டா மாற்றம் செய்து கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அகில இந்திய அளவில் மின் ஆளுமை சேவை திட்டத்தின் மூலம் சிறந்த சேவை புரிந்தமைக்காக தருமபுரி மாவட்டம் கடந்த ஆண்டு 3-வது இடத்தை பிடித்தது. மேலும் இணையதளம் வாயிலாக சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ள ஏதுவாக மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க அலுவலகங்களிலும், புதுவாழ்வு திட்ட கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மூலமாகவும் இயங்கும் சேவை மையங்களில் பொது மக்கள் விண்ணப்பித்து பயன்பெறலாம். மின் ஆளுமை சேவை மையம் மூலம் சான்றிதழ் கேட்டு விண்ணப்பிக்கும் பொதுமக்களுக்கு எஸ்.எம்.எஸ். வாயிலாக சான்றிதழ் கிடைக்கும் விவரம் தெரிய வருவதற்கான வசதிகளை அரசு செய்துள்ளது.

தமிழக அரசு தனிநபர் கழிப்பறை அமைக்க ரூ. 12 ஆயிரம் வீதம் வழங்கி வருகிறது. அதனை பெற்று பொதுமக்கள் கழிப்பறைகளை கட்ட முன் வர வேண்டும். 100 நாள் வேலை வாய்ப்பு திட்டம் நமது மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர்களின் சம்பள விவரங்கள் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு சம்மந்தப்பட்டவர்களுக்கு எஸ்.எம்.எஸ் வாயிலாக தமிழில் தெரிவிக்கப்படுகிறது. தென்மேற்கு பருவ மழை, வெள்ளம், புயல் மற்றும் நிலநடுக்க காலங்களில் கிராம அளவில் பாதுகாத்து கொள்ள பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 04.06.2016 அன்று கிராம சபைக் கூட்டங்கள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ள என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக வேளாண்மைத்துறை, வேளாண் வணிகத்துறை, தோட்டக்கலைத்துறை, சுகாதாரத்துறை ஆகிய துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.

இம்முகாமில் நல்லம்பள்ளி ஒன்றியக்குழுத்தலைவர் திரு. எம். முனுசாமி, அதியமான்கோட்டை ஊராட்சிமன்ற தலைவர் திரு. சண்முகம், வட்டாட்சியர் திரு. மில்லர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு. ஆனந்தன், திரு. அன்பழகன், மண்டல துணை வட்டாட்சியர் திரு. சதாசிவம், வட்ட வழங்கல் அலுவலர் திரு. ராஜராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : - செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.